**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC.352 /2023**

**Deposition of P.W.** 9

Name : சைஜு

S/o, D/o, W/o : சசி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:28.01.2026

Accused Present.

**முதல் விசாரணை–**

நான் காவஸ்தலத்தில் வசித்து வருகிறேன். கடையில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. இறந்து போன ஸ்டான்லியை தெரியும். அவர் எவ்வாறு இறந்தர் என்று எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதிக்க கோரி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

ஆஜர் எதிரி இறந்து போன ஸ்டாலின் வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்து ஸ்டாலினின் அப்பா மற்றும்அம்மாவை அசீங்கமாக பேசியதால் மனமுடைந்த ஸ்டாலின் விஷம் குடித்து இறந்து போனதாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது அரசுக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–**

எதிரி தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352/2023**

**Deposition of P.W.** 10

Name : நெல்சன்

S/o, D/o, W/o : தாசன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated: 28.01.2026

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் ஆசாரிகுடிவிளையில் வசித்து வருகிறேன். கூலிவேலை செய்கிறேன். எனது ரப்பர் தோட்டம் முட்டுக்குழி ஆனைபாறையில் உள்ளது. சுமார் 2வருடங்களுக்கு முன்னர் அதிகாலை 03.00 மணிக்கு தோட்டத்திற்கு போனேன். ஸ்டான்லி அங்கு இறந்து கிடந்தார். ஸ்டாலின் தந்தைக்கு நான் தகவல் சொன்னேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பால்வெட்டுவதற்கு 03.00 மணிக்கு போனேன். பாலனை எனக்கு முன்னரே தெரியும். பாலன் தெரிந்தவர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352/2023**

**Deposition of P.W.** 11

Name : வின்செண்ட்

S/o, D/o, W/o : ஞானாபர்ணம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:28.01.2026

Accused Present.

<u>முதல் விசாரணை</u>–

நான் குலசேகரத்தில் அரியம்பகோட்டில் வசித்து வருகிறேன். கொத்தனராக வேலைபார்க்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது வீட்டின் அருகே வைத்து போட்டேன். குலசேகரம் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு கல் மற்றும் கம்பி ஆகியவற்றை கைப்பற்றிய போது பார்வை மகஜரிலும், அத்தாட்சியிலும் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.2, அத்தாட்சி அ.சா.ஆ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

இறந்தவர் வீட்டின் அருகே வைத்து கையொப்பம் செய்து கொடுத்தேன். அப்போது நான் அவரது வீட்டின் அருகில் உள்ள எனது

தோட்டத்தில் இருந்தேன். கம்பி, கல் ஆகியவற்றை ஸ்டாலின் வீட்டிலிருந்து எடுத்தார்கள். நான் எடுத்ததை பார்க்கவில்லை. போலீசார் என்னை 11.00 மணிக்கு விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. பாலனுக்கு பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 352/2023**

**Deposition of P.W.** 12

Name : ஜாக்சன் டேனியல்

S/o, D/o, W/o : டேவிட்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:28.01.2026

Accused Present.

முதல் விசாரணை–

நான் குலசேகரம் செறுதிகோணத்தில் வசித்து வருகிறேன். மருந்து கடை வைத்துள்ளேன். இறந்து போன ஸ்டாலினை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் என்னுடையது தான். அத்தாட்சியில் உள்ள கையொப்பமும் என்னுடையது தான். அதனை எனது கடையில் வைத்து போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனது கடை குலசேகரம் மார்க்கெட் சந்திப்பில் உள்ளது. செறுதிகோணத்திலிருந்து குலசேகரம் சந்திப்பு 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான்.